செ.வெ.எண்.40 நாள்.29.1.2012

**நாமக்கல் வட்டம் நரவலூர், மரூர்பட்டி, அரசநத்தம் ஆகிய மூன்று ஊராட்சிகளைச் சேர்ந்த 1344 குடும்பங்களுக்கு ரூ.69.08 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் வழங்கினார்.**

நாமக்கல் வட்டம் நரவலூர், மரூர்பட்டி, அரசநத்தம் ஆகிய மூன்று ஊராட்சிகளைச் சேர்ந்த 1344 குடும்பங்களுக்கு ரூ.69.08 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் வழங்கி பேசியதாவது: தேர்தல் வாக்குறுதிகள் தற்போது திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்காக அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. விலையில்லா 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. முதியோர் ஓய்வூதிய தொகை ரூ.500லிருந்து ரூ.1000மாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. கல்விதுறையில் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முதல்வர் அவர்கள் மாணவ மாணவியர்களின் பெற்றோர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தக்கூடாது என்ற வகையில் இலவச சீருடை பாடப்புத்தகங்கள் விலையில்லா மிதிவண்டி, இலவச பஸ் பாஸ், இலவச மடிக்கணினி ஆகியவைகள், அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கல்வியில் இடைநிற்றலை தவிர்க்கும் வகையில் அரசின் சார்பில் 10,11-ம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு கல்வி சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.1,500-ம், 12-ம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.2000-ம் வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை இவர்களின் கல்லூரி படிப்பிற்கு உதவியாக இருக்கும்.

திருமண நிதியுதவியாக அரசின் சார்பில் 10-ம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000-ம், பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000 வழங்கப்பட்டு வருகிறது. மேலும் திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டு வருகிறது. 10-ம் வகுப்பிற்கு குறைவாக படித்த பெண்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் திருமண நிதியுதவியாக ரூ.10000 வழங்கப்படுகிறது. கிராமப்புறப்பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு சொட்டுநீர்பாசனம் அமைத்திட மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 4 ஆண்டுகளுக்கு ரூ.4 லட்சம் வரையிலான சிகிச்சைகளை பெற்றிடலாம். இதுவரை இத்திட்டத்தின்கீழ் அடையாள அட்டை பெறாதவர்கள் மாவட்ட ஆட்சியரகத்தில் இதற்கென பிரத்யேகமாக இயங்கும் மையத்தில் புகைப்படம் எடுத்து அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம். அரசின் திட்டங்களை பயன்படுத்தி மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் பேசினார்.

விழாவிற்கு தலைமை வகித்த நாமக்கல் சார் ஆட்சியர் திரு.டி.ஜி.வினய் இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது: வசதி படைத்த பணக்காரர்கள் வீட்டில்தான் மின்விசிறி, கிரைண்டர்கள் இருக்கும், தற்போது அரசு சார்பில் அரிசி பெறத்தகுதியுடைய அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் விலையில்லா மின்விசிறி மிக்ஸி, கிரைண்டர் வழங்கப்பட்டு வருகிறது. நாமக்கல் வட்டத்தில் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 9 ஊராட்சிகளைச் சேர்ந்த 3102 குடும்பங்களுக்கு ரூ.1.59 கோடி மதிப்பிலான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி,

கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளது. அரசின் சார்பில் வழங்கப்படும் இப்பொருட்களை முறையாக பயன்படுத்தி பராமரித்திடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் நரவலூர் ஊராட்சியைச் சேர்ந்த 480 குடும்பங்களுக்கும், மரூர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த 515 குடும்பங்களுக்கும் அரசநத்தம் ஊராட்சியைச் சேர்ந்த 349 குடும்பங்களுக்கும் என மொத்தம் 1344 குடும்பங்களுக்கு ரூ.69.08 லட்சம் மதிப்பிலான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை வழங்கினார்.

விழாவில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.கே.காந்திமுருகேசன், துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேல், ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி.கவிதா சந்திரன் (நாமக்கல்), திரு.சிவசாமி என்கிற ராமநாதன் (மோகனூர்) நாமக்கல் நகர்மன்றத் தலைவர் திரு.இரா.கரிகாலன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.மயில் என்கிற சுதந்திரம் நாமக்கல் வட்டாட்சியர் திருமதி.இரா.புஷ்பவதி, ஊராட்சி மன்றத்தலைவர்கள் திரு.கே.பாபு, (நரவலூர்) திரு.நாகராஜன், (மரூர்பட்டி), திரு.ரவிச்சந்திரன் (அரசநத்தம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.